सत्यमेव जयते

# இந்திய துணைத்தூதரகம்

**யாழ்ப்பாணம்**

## ஊடக அறிக்கை

இந்தியாவின் 65ஆவது குடியரசு தினமானது யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் ஜனவரி 26ஆம் திகதி 2014ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. துணைத்தூதர் திரு.வி.மகாலிங்கம் அவர்கள் இந்திய தேசியக்கொடியை காலை 9.00 மணிக்கு ஏற்றி வைத்து, மேன்மைதங்கிய இந்திய ஜனாதிபதி திரு.பிரணாப் முகர்ஜியின் செய்தியை வாசித்தார். அவர் வட மாகாணத்தில் கடந்த வருடம் முதல் பொறுப்பேற்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் பேசினார்.

காலை இடம்பெற்ற இந்திய தேசியக் கொடியேற்றல் நிகழ்வு வடமாகாணத்தில் தங்கியுள்ள இந்தியர்களது குடும்பத்தினரின் வருகையால் நிறைவாக அமைந்தது.

துணைத்தூதர் திரு வி.மகாலிங்கம் அவர்கள் 65ஆவது இந்திய குடியரசு தினத்திற்காக மாலைநேர வரவேற்பு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வின் பிரதம விருந்தினர் வடமாகாண ஆளுனர் கௌரவ ஜி.ஏ.சந்திரசிறி அவர்களாவார். கௌரவ விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் கௌரவ நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டார். ஏனைய முக்கிய விருந்தினர்களாக பிரசன்னமளித்தவர்கள், பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ சில்வெஸ்திரி அலன்ரின் மற்றும் யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவும் ஆவர். வடமாகாணசபையின் அமைச்சர்களான கௌரவ பொ.ஐங்கரநேசன், கௌரவ திரு. குருகுலராஜா, கௌரவ வைத்திய கலாநிதி பி.சத்தியலிங்கம், கௌரவ திரு.பி. டெனிஸ்வரன் ஆகியோர் புதிதாகத் தேர்வுசெய்யப்பட்ட வட மாகாணசபையின் ஏனைய உறுப்பினர்கள் சகிதம் வருகை தந்திருந்தனர். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் நிகழ்வைச் சிறப்பித்தனர்.

சிவில் சமூக உறுப்பினர்கள், சமயத்தலைவர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், வர்த்தகர் சங்க உறுப்பினர்கள், வர்த்தக சமூகம், மருத்துவர்கள், கல்விமான்கள், வடமாகாணத்தின் முக்கிய கலாச்சார பெரியோர்கள், வடமாகாணத்திலுள்ள இந்தியப் பிரஜைகள் உள்ளிட்ட 400இற்கு மேற்பட்டவர்கள் இருந்த நிகழ்வில் துணைத்தூதுவர் தனது உரையை ஆற்றினார்.

அவர் தனது உரையில் வடமாகாண ஆளுனர் கௌரவ ஜி.ஏ.சந்திரசிறி அவர்களுக்கும் வடமாகாண முதலமைச்சர் கௌரவ நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் அவர்களுக்கும் அழைப்பை ஏற்றுக்கொண்டமைக்காக தனது நன்றியைத் தெரிவித்தார்.

தனது உரையைத் தொடங்கும்போது, அவர் 65ஆவது குடியரசு தின மாலை வேளையில் மேன்மைதங்கிய இந்திய ஜனாதிபதி திரு.பிரணாப் முகர்ஜி அவர்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் உள்ளடக்கத்தினை சுருக்கமாக எடுத்துக் காட்டினார். கௌரவ வெளிவிவகார அமைச்சர் திரு. சல்மான் குர்ஷித் அவர்களே வடமாகாண சபை பதவியேற்றபின் முதன்முதல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த வெளிநாட்டு முக்கியஸ்தர் என்பதையும் அவர் கௌரவ ஆளுநர், கௌரவ முதலமைச்சர், மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடியமையையும் எடுத்துக்காட்டினார். 2009 மே மாதத்தில் யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் வடமாகாணத்தில் இந்தியா பொறுப்பேற்று நடத்தும் ஒரு தொகை அபிவிருத்திச் செயற்றிட்டங்களைப் பற்றி துணைத்தூதர் சுட்டிக் காட்டினார். அத்துடன் மைல்கல்லாக அமையும் இந்திய வீட்டுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். இதன் முதற்கட்ட செயற்றிட்டமாக 2012இல் முடிக்கப்பட்ட 1000 வீடுகள் எனும் திட்டத்தையும் பயனாளிகளின் பங்கு பற்றலுடன் 43000 வீடுகளைக்கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்ட இரண்டாம் கட்டத்தையும் உள்ளடக்கும். 2013 டிசம்பரில் 10,250 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டதாக தெரிவித்தார். இந்திய உதவித் திட்டத்தின் கீழ் காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு பலாலி விமான நிலையத்தில் பகுதியளவில் அமைக்கப்பட்ட ஓடுதளம் பற்றிப் பிரஸ்தாபித்தார். வடகடல் மீன்வலைத் தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை புனரமைப்பு, வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 200 கட்டில்களுடைய விடுதியமைப்பு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சிறு வியாபாரிகளுக்கான உதவிகள் போன்ற இந்திய உதவித்திட்டங்கள் பற்றியும் பிரஸ்தாபித்தார். இந்திய ரயில்வே கட்டுமான நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் புகையிரதத்தடம் நிறைவை எட்டுகிறது எனவும் ஜூன் 2014 இல் யாழ்தேவி கடுகதி புகையிரதம் யாழ்ப்பாணத்தை வந்தடையும் என்பதையும் குறிப்பிட்டார். 2014இல் நடைபெறவுள்ள எதிர்காலத் திட்டங்களாக யாழ்ப்பாண கலாச்சார மையம், துரையப்பா விளையாட்டரங்கப் புனரமைப்பு, கோப்பாயில் மொழி ஆய்வுகூடம், கைதடியில் கைவினைக் கிராமம் போன்றவற்றைக் குறிப்பிட்டார். கலாச்சாரத்துறையில் தெய்வீக சுகானுபவம் எனும் இசைநிகழ்வை நல்லூர் உற்சவகாலத்தில் தொடர்ந்தும் நடாத்த தூதரகம் திட்டமிடுவதுடன் மகாபலிபுரத்தில் செதுக்கப்படும் தூண்கள், விக்கிரகங்களைக் கப்பல் மூலம் மன்னாருக்குத் தருவித்து திருக்கேதீஸ்வரம் ஆலயத்தை புனருத்தாரணம் செய்யவுள்ளமை தொடர்பாகவும் திட்டமிடுகிறது.

கௌரவ ஆளுனர் ஜி.ஏ. சந்திரசிறி அவர்கள் தனது உரையில் துணைத்தூதர் சிறப்பாகக் குறிப்பிட்ட இந்திய அரசின் பல்வேறு உதவித் திட்டங்களுக்காக நன்றி தெரிவித்தார். வடக்கு மாகாணத்திற்கும் அதன் மக்களுக்கும் இந்தத் திட்டங்கள் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பு செய்தமையை குறிப்பிட்டார். வடமாகாண மக்களுக்கு இந்திய அரசு காட்டி வரும் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

நிகழ்வுகள், புது டில்லியிலுள்ள கலாச்சார உறவுகளுக்கான பேரவையின் உதவியுடன் துணைத் தூதரகத்தின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்ட “இந்தியக் கலாச்சாரக் கூடத்தின்” இசை ஆசிரியர் திருமதி. வாசஸ்பதி ரஜீந்திரனது தலைமையில் அவரை ஆசிரியராகக் கொண்ட மாணவர்களது இந்திய சாஸ்திரீய குரலிசையுடன் முடிவுக்கு வந்தது.